**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 16.10.2024 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ள திரு உமர்அப்துல்லாவிற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு 3 சதவிகித அகவிலைப்படி உயர்வு வழங்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரியில் வரும் 21-ஆம் தேதி ரேஷன் கடை திறக்கப்பட்டு. அரிசி-சர்க்கரை வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

வங்ககடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை அதிகாலை வாக்கில், புதுச்சேரிக்கும், நெல்லூருக்கும் இடையே கரையை கடக்க கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***மோடி-உமர்அப்துல்லா***

ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சராக பதவி ஏற்றுள்ள திரு உமர்அப்துல்லாவிற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து

தெரிவித்துள்ளார். மக்களுக்கு சேவை புரிவதற்கான திரு உமர் அப்துல்லாவின் முயற்சிகள் எல்லா வகையிலும் சிறக்கத் தாம் வாழ்த்துவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார். ஜம்மு-காஷ்மீர் முன்னேற்றத்திற்காக திரு உமர் அப்துல்லா மற்றும் குழுவினருடன், மத்திய அரசு, ஒருங்கிணைந்து பாடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். முன்னதாக ஸ்ரீநகரில் உள்ள ஷேரே காஷ்மீர் சர்வதேச மாநாட்டு மையத்தில் இன்று நடைபெற்ற விழாவில் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவர் திரு உமர் அப்துல்லா,ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சராக பதவி ஏற்றார். அவருக்கும் இதர அமைச்சர்களுக்கும், துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா, பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவி ஏற்பு விழாவில், காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, சமாஜ்வாதிக் கட்சியின் தலைவர் திரு அகிலேஷ் யாதவ், முன்னாள் ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் திருமதி மெஹபூபா முஃப்டி, மற்றும், இண்டியா கூட்டணியின் இதரத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

*அரியானா*

அரியானாவில், தற்போதைய பொறுப்பு முதலமைச்சர் திரு நயாப் சிங் சைனி, பிஜேபி சட்டமன்றக் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். பஞ்ச்குலாவில் இன்று நடைபெற்ற புதிய பிஜேபி சட்டமன்ற

உறுப்பினர்களின் கூட்டத்திற்கு பின்னர் மத்திய உள்துறை அமைச்சரும், கட்சி மேலிடப் பார்வையாளருமான திரு அமித் ஷா இன்று அறிவித்தார். மத்திய அமைச்சர்கள் திரு தர்மேந்திர பிரதான், திரு மனோகர் லால், மாநில பிஜேபி தலைவர் திரு லால் பதோலி உள்ளிட்டவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். பிஜேபி சட்டமன்றக் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, திரு சைனி, அரியானா ஆளுநர் திரு பண்டாரு தத்தாத்ரேயாவை சந்தித்து, ஆட்சி அமைக்க உரிமை கோருகிறார். புதிய அரசின் பதவி ஏற்பு விழா பஞ்ச்குலாவில் உள்ள ஷாலிமார் மைதானத்தில் நாளை நடைபெறும்.

*அமைச்சரவை*

மத்திய அரசு ஊழியர்களுக்கு 3 சதவிகித அகவிலைப்படி உயர்வு வழங்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் 49 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும், 64 லட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவார்கள் என்று மத்திய தகவல்- ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், மத்திய அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்னர், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், ராபி பருவப் பயிர்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலைகளை உயர்த்தவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்படி,

கோதுமைக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 150 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. கடுகு, பருப்பு, கொண்டைக் கடலை உள்ளிட்ட பயிர்களுக்கான ஆதரவு விலைகளும் உயர்த்தப்பட்டுள்ளன. உத்தரபிரதேசத்தில் வாரணாசிக்கும், முகல்சராயில் உள்ள பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா ரயில் நிலையத்திற்கும் இடையே பல்தட ரயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. கங்கை நதியின் குறுக்கே, சாலை மற்றும் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் உத்தேசமும் இத்திட்டத்தில் அடங்கும். 2 ஆயிரத்து 642 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டத்தினால், போக்குவரத்து வசதிகள் அதிகரிப்பதுடன், எண்ணெய் இறக்குமதி மற்றும் கார்பன் வெளியீடும் குறையும் என்று அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

மோடி-இயக்கம்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் பிஜேபி தலைவர் திரு ஜேபி நட்டா முன்னிலையில், கட்சியின் தீவிர தொண்டராக தம்மைப் பதிவு செய்து கொண்டு, பெரும் எண்ணிக்கையில் தீவிர தொண்டர்களை கட்சியில் சேர்ப்பதற்கான, சக்ரிய சதஸ்யதா இயக்கத்தை தொடக்கி வைத்தார். பாரதிய ஜனதா கட்சியின் தீவிர தொண்டராக பதிவு செய்து கொண்டது குறித்து தாம் பெருமிதம் அடைவதாகவும், அடித்தட்டு நிலையில் கட்சியை மேலும் வலுப்படுத்தி, தேசிய முன்னேற்றத்தில் கட்சித்

தொண்டர்களின் திறம்பட்ட பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்கான தருணம் இது என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார். பிஜேபி தொண்டர்கள் தீவிர தொண்டராக பதிவு பெற, வாக்குச்சாவடி அல்லது சட்டமன்ற தொகுதி அளவில், 50 புதிய தொண்டர்களை கட்சியில் சேர்க்க வேண்டும் என்றும், கட்சியின் மண்டலக் குழு தேர்தல்களில் போட்டியிட தீவிர தொண்டர்கள் தகுதி பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். வரவிருக்கும் காலங்களில் கட்சிக்காக பல்வேறு விதங்களில் பணிபுரிய தீவிர தொண்டர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

*புதுச்சேரி-ரேஷன் கடை*

புதுச்சேரியில் வரும் 21-ஆம் தேதி ரேஷன் கடை திறக்கப்பட்டு. அரிசி- சர்க்கரை வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார். இன்று சட்டப்பேரவை அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் ரேஷன் கடையில் மாதா மாதம் இலவச அரிசி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்தார். புதுச்சேரியில் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை ஏற்கனவே அறிவித்த படி, 1000 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும் என்றும், 24.5 கோடி ரூபாய் கூடுதல் செலவிலான இத்திட்டத்தினால், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அனைத்து நான்கு பிராந்தியங்களிலும், மொத்தம் 21

ஆயிரத்து 239 பயனாளிகள் பயன் பெறுவார்கள் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். உயர்த்தப்பட்ட உதவித் தொகை கடந்த அக்டோபர் மாதத்தை முன் தேதியாகக் கொண்டு, நவம்பர் மாதம் முதல் சேர்த்து வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 175 பயனாளிகளுக்கும், உயர்த்தப்பட்ட அளவில் உதவித் தொகை வழங்கப்படும் என, முதலமைச்சர் அலுவலகம் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

*ரங்கசாமி-வீடு*

புதுச்சேரியில், உருளையன்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட பிரியதர்ஷினி நகரில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒதுக்கீடு பெற மாவட்ட தேர்வுக் குழுவால் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 32 பயனாளிகளுக்கு, முதலமைச்சர் திரு ரங்கசாமி, இன்று வீடு ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம். வீட்டுவசதி துறை அமைச்சர் திரு திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர் திரு நேரு என்கிற குப்புசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், குடிசை மாற்று வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு ஆர் சுந்தரராஜ், மற்றும் இதர அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

*வானிலை*

தென்மேற்கு வங்ககடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று, சென்னைக்கு கிழக்கு-தென்கிழக்கே சுமார் 250 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுச்சேரிக்கு கிழக்கு-தென்கிழக்கே சுமார் 320 கிலோ மீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளது. மணிக்கு 15 கிலோ மீட்டர் வேகத்தில் மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து வரும் இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை அதிகாலை வாக்கில், புதுச்சேரிக்கும், நெல்லூருக்கும் இடையே, சென்னை அருகே, வடதமிழகம் மற்றும் தெற்கு ஆந்திர கடற்கரையை கடக்க கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக அடுத்த 4 நாட்களில் தமிழ்நாடு, புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த 24 மணி நேரத்தில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவாருர் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில், கனமழை முதல் அதி கன மழைக்கும், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை முதல் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாளை 17-ஆம் தேதி, சென்னை, காஞ்சிபுரம்,செங்கல்பட்டு, திருவள்ளுர், வேலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக

கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறி உள்ளது.. வடதமிழகம் மற்றும் தெற்கு ஆந்திரத்தின் கடலோரப் பகுதிகளிலும், தென்மேற்கு மற்றும் மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளிலும், அதிகபட்சம் மணிக்கு 60 கிலோமீட்டர் வரையிலான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இன்று முதல் வரும் 18-ஆம் தேதி வரை கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் சோழவரத்தில் 30 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரி பாகூரில், 5 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

நேரடி ஆய்வு

புதுச்சேரியில் கனமழை எச்சரிக்கையைத் தொடர்ந்து முதலமைச்சர் அறிவுறுத்தியதன் பேரில் , உள்ளாட்சித் துறை இயக்குநர் திரு சக்திவேல், பல்வேறு பகுதிகளில் மழைநீர் தேங்கும் இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு, மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் வாய்க்கால்களைத் தூர்வாரவும், அனைத்து வடிகால் மேம்பாட்டுப் பணிகளை உடனடியாக நிறைவேற்றி முடிக்கவும், நகராட்சி ஊழியர்களுக்கு உத்தரவிட்டார். நகராட்சி ஆணையர், செயற் பொறியாளர் மற்றும் இதர அதிகாரிகள், இந்த ஆய்வின் போது உடன் இருந்தனர்.

*மீன்வளத் துறை*

புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் வரும் 18-ஆம் தேதி வரை கடலுக்குள் செல்ல வேண்டாம் என, வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கை அடிப்படையில், புதுச்சேரி அரசின் மீன்வளத் துறை அறிவுறுத்தி உள்ளது. வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கை குறித்து, மீனவர்களின் மொபைல் எண்ணிற்கு குறுந்தகவல் அனுப்பப் பட்டுள்ளதாகவும், அடுத்தடுத்து ஏற்படும் வானிலை மாற்றங்களைப் பொறுத்து இந்த எச்சரிக்கை மாறுபடும் என்பதால் புதுச்சேரி அரசு அவ்வப்போது வெளியிடும் எச்சரிக்கை தகவல்களை மீனவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் மீன்வளத் துறை கேட்டுக் கொண்டுள்ளது. அரசு அறிவிப்பை மீறி கடலுக்குள் செல்லும் மீனவர்களுக்கு அரசின் நலத் திட்ட உதவிகள் நிறுத்தப்படும் என்று மீன்வளத்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்..

*பியூஷ் கோயல்*

நாட்டில் உற்பத்தி பொருட்களின் அதிகபட்ச தரத்தையும், சுற்றுச்சூழல் மீதான குறைந்த பட்ச தாக்கத்தையும், ஒரே சமயத்தில் உறுதிப்படுத்த அரசு பாடுபட்டு வருவதாக மத்திய தொழில்- வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் இந்திய தர மேலாண்மை நிறுவனத்தின் 2 நாள் கருத்தரங்கில், நிறைவு நாள் அமர்வில் அவர் உரையாற்றினார். நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில்

தரக்கட்டுப்பாட்டு உத்தரவின் கீழ் கொண்டு வரப்பட்ட உற்பத்தி பொருட்களின் எண்ணிக்கை, 106-ல் இருந்து, 732-ஆக அதிகரித்திருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியாவை உருவாக்கும் வகையில் தேசிய தர மேம்பாட்டு இயக்கத்தை நிர்வகிப்பது குறித்து அவர் பேசுகையில், உற்பத்தி பொருட்களின் தர உறுதிப்பாட்டுச் சூழலை, சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நீட்டிப்பதில், தொழில் துறை தலைவர்கள் அரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். ஏற்கனவே பொம்மை உற்பத்திக்குத் தேவையான எல்லா உதிரி பாகங்களையும், உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கு ஏற்ற சூழல் ஒன்றை அரசு ஏற்படுத்தி இருப்பதாகவும், இதனால் பொம்மை ஏற்றுமதி நாடாக இந்தியா மேம்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ள திரு உமர்அப்துல்லாவிற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு 3 சதவிகித அகவிலைப்படி உயர்வு வழங்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரியில் வரும் 21-ஆம் தேதி ரேஷன் கடை திறக்கப்பட்டு. அரிசி-சர்க்கரை வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

வங்ககடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை அதிகாலை வாக்கில், புதுச்சேரிக்கும், நெல்லூருக்கும் இடையே கரையை கடக்க கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.